உ

வேலுமயிலூர் துணை.

நூதன கிராம்போன்
ஸங்கீதகீர்த்தனம்ருதம்

(முதற்பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்.

கிரீன் லேபில்

சங்கீத வித்வான்

. சுப்பையபாகவதர் பாடியது.

ட் நே. 2836 கற்பிற்சிறந்த எந்தன் கனியே 1-2-பாகம்

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

கற்பிற் சிறந்த எந்தன் கனியே
ருங்கனியே பெருந்துணையே அருந்துணையே க

அநுபல்லவி.

அற்புத மகிமையை அறிந்த உன் குணமே
யோ! எனவருத்தல் வருந்துண வீணமே
நற்பயன் தருமாயர் குலத்தமைக் குணமே
நம்பிவிடுத்தே னெந்தன் தேவி
நானே பாவி உயிர்மேவி உயிர்மேவி
ல்வச் சிறப்பிழந்து சிறும்பட்டேனே
தவடியாள் கடனுல் சிறமழுற்றேனே
வல்வினை பயன் வந்து வழிதடுத்தானே
வந்தது நமக்கு இந்தக் காலம்
வங்கோலம் தவசீலம் தவசீலம் க

72
122
OFFICE OF THE REG...
31

பிளேட் நெ, 2742 { தாரணியில் அன்புகொண்ட
பூங்கா விநோதமே

இராகம்-தேசிகதோடி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாரணியில் அன்புகொண்ட
தங்கையைக் காணேன் என்
தங்கையைக் காணேன் நல்ல
தங்கையைக் காணேன் இனி
இங்குயிர் பூணேன் தா

அநுபல்லவி.

நேரிலுன்னைத்தேடினேன் நெஞ்சமிகவாடினேன்
ஆறுமற்றபாவியானேன் என்தங்கா
ஆறுமற்றபாவியானேன் இன்று நான்
ஆறுமற்றபாவியானேன் அபலையோடினேன்
என் தங்கா-என் தங்கா-என் தங்கா
அபலையோடி நான் என் தங்கா தா

1954

இராகம்-ஹரிகாம்போதி, தாளம்-ஆதி.

784.0954

பல்லவி.

பூங்கா விநோதமே புகலவொண்ணாத ப்ரமாதமே பூ
பத்திக்கும் நெத்திக்கும் அதுவர
சித்திக்கும் நத்திக்கும் அதிசுக பூ
பொங்கும் எங்கும் பரிமளங்
தங்கும் பொங்கும் பெருவளம் பூ
பொன்னுலகம் தன்னிலுரை யமரரும்
இந் நிலம் வாழ் மன்னர்களும் தினம் புகழ் பூ
பூரிக்குமே விவ காரிக்குமே நவ
சாரிக்குமே சுகம் பாரிக்குமே இன்ப பூ
புனிதப்படுமவர் இனிதுக்கிடமுயர்
முனிதற்கருந்தவம் கனிதற்கதி நய
காதலித்தினி மேசுகித்திட
மேமிகுத்திடு ஆசைவைத்திடு

அநுப்பல்லவி.

5469
பரங்கானசோலை காக்ஷி
பற்பல வற்புத கற்பகதீப

சரணம்.

நீங்காதிரவும் பகல் நின்றருளீர்ந்திடும்
தென்றலும் வீச
தீங்குயில்பாட மயிலாட நல்ல சித்தன நர்த்தன
மெத்தவுல்லாசம் தேர்ந்தமரங் கொத்திகள் பூ

தூக்குத்தூக்கி

பிளேட் நே, 2421 { ஏராதுமலேமேலே
சாயம்வெளுத்துப்போச்சு

தெம்மாங்கு.

ஏருத மலேமேலே
எருது ரெண்டு தத்தளிக்க
பாராமல் கைகொடுத்தான்
பழனிமலே ஆண்டவனே ஏ

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

சாயம் வெளுத்துப் போச்சு
சட்டாம்பிள்ளேயை ஓட்டலாச்சு
மாயமதாய் தூக்குத்தூக்கி
வந்ததுங்கள் பாக்யமாச்சு
தங்கச்சி வாங்களேன் நடந்திடலாம்
மாப்பிள்ளேயைப் பார்த்து மகிழ்ந்திடலாம்
கொஞ்சின கோகிலமே
கோவில் வரச் சொன்னதென்ன
கொஞ்சமாட்டே னென்றுயிர்
விடுவேனென்று சொன்னதென்ன
தங்கச்சி வாங்களேன் நடந்திடலாம்
மாப்பிள்ளேயைப் பார்த்து மகிழ்ந்திடலாம் சா

ஆர்மோனியம் உரையூர்.

T. M. காதர்பாக்ஷா பாடியது.

பிளேட் நே, 2021 { தினந்துதிப்பாய் நெஞ்சே
ஆதாரமெனேக்கார்

இராகம்-சாரங்கா-தாளம்-ஆதி.

பல்லவி.

தினந்துதிப்பாய் நெஞ்சே ஸ்ரீரகுராமனே

அநுபல்லவி.

ஸ்ரீரகுராமனே தாரக நாமனே தின

சரணங்கள்.

இனகுலதீபனே ஜானகி சல்லாபனே
அனவரதமும் நம்மை ஆளும் பிரதாபனே தின

முத்தொழில் கர்த்தனே வித்தக சித்தனே
கற்றவர் மனதிடம் காளிங்க நிர்த்தனே தின

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதார மெனக் கார்
அடியேனைக் கண்பார் அதிலுனக்குப் பேர்
வருமறுமுக சரவண ஆ

1954

அநுபல்லவி.

பாதார விந்தந் தா தருமனே
தானிரங்கி நெஞ்சம் கொஞ்சம் தயவுசெய் ஆ

784.0954

சரணம்.

அகத்தியர்தனே தமிழ்தரு முயர்புகழ்
அருட்பதம்பொரு ளருளிய குருபர
ஜெகத்திலன்பர்கள் தினமுனே தொழுதிட
திருப்பரங்கிரி கொலுவிடும் கடவுளே ஆ

பிளேட் நெ, 1903. { நெஞ்சமே இந்த
வாவா கார்த்திகா

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நெஞ்சமே இந்தமானிட வாழ்வு நிச்சயமா நெ

அநுபல்லவி.

பரமன் திரு வடியார்களை
மதியாமலே கெடுவாய் மட நெ

சரணம்.

பாழும் உடலைச் சதமெனவே நம்பி
பரமன் திருவடியார்களை
மதியாமலே கெடுவாய்மட நெ

தஞ்சமென்றோர்களின் சஞ்சலம்தீர்த்திடும்
சதுர்மாமறை முடிமேவிய
சரவண பவ குருமால் பணி செ

இராகம்-மால்கோஷ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவா கார்த்திகா செழும்
மரகதமயில்மிசை தருணமிது விரைவில் வா

அநுபல்லவி.

புவிமீதில் வாழ்வு பொய்யன்றோ தாழ்வு
புனிதம்பெற பூஜித்தேன்
புகழ் கடம்பனே மகிழ் திடந்தந்தருள் வா

சரணம்.

தஞ்சமுன் பாதம் தானருள் போதம்
தண்டமிழ்ப் பதமே சுந்தரன் ஸ்தாபன
பக்திச் சித்தச் சோகமகற்ற விச்சுபதினத்தில் வா

மிஸ். S. R. கமலம் பாடியது.

பிளேட் நே, 2134 முருகனிட மேன்முறைசோல்வாய்
1-2 பாகம்.,

இராகம்-காம்போதி-ரூபகம்.

பல்லவி.

முருகனிட மென்முறை சொல்வாய் கிளியே!
கிளியே! கிளியே! கிளியே! முரு

மகுடங்கள்.

நாளும் முளங்குதுதி செழும்பழனி
இளங்குமரனெனும் ப்ரபலகுக முரு

முகநகையுற அகமகிழ்திருப்
புகழுரையதி லொருவர்மருவிய முரு

முப்பிறப்பில் கொண்டவினை மூண்டிருந்தால்
இப்பிறப்பிலண்டிடாமல் வேண்டுவதாய் சொந்த முரு

மூடமதியாலே பொல்லா மாதர்களை நாடியுடல்
வாடிவுள்ளம் வேதனை யானதாலே முரு

முக்கியமிது பற்பலதுயர்
பற்றுவது சகித்திடவசமல முரு

முற்றுமுனை நம்பியவொரு
பக்தன்சொல் சங்கதியென அந்த முரு

அநுபல்லவி.

செரிதரு முலகோர் புகழ்திரு
பெருநாளைப் பெரு மதுரையில்
திருநாளைப் பெருமான் புதல்வனும்
முன்னோர் ஏற்றம்
இப்பிரபஞ்சசிதி சுப்ரமணியனெனும் முரு

சரணங்கள்.

நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்
நுண்ணறிவும்தவப் புண்ணியஸ்நேகமும்
தூயவென் தாய்மன துக்கமகற்றவும்
தூது நீயே இனி வேறில்லை
தொண்டன் சுந்தரன் சந்ததம்
துதித்தேன் மதித்தேன்
ஸ்மரித்தேன் ப்ரசித்த
பட்டினத்து செட்டி சுக்ல
முற்பவித்த வித்வ புத்ர
வித ரண குண வருண கிரியே முரு

பிளாக் லேபில்.

பிளேட் நெ, 4930 { வேதாந்த சாரா / ஆண்டிபண்டாரம் }

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேதாந்த சாரா ஸ்ரீ
விசித்ர மயூரா சாமி வே

அநுபல்லவி.

வேகமான மயில்
வாகனத்தி விருத்
தே கருணை செய் வே

சரணம்.

விமலா கரப் பொருளே
வேலாயுதா வருளே
மூலாதரப் பதி வே

கந்தா னந்தா சிவ
மைந்தா எந்தையா
தந்திடுவாய் வரம் வே

நாதாந்த காருண்யா
நலந்தர சுப்ர மண்யா
ஞாலமீது வரும்
நீலமா மயிலின்
மேலொளிர் முருகனே வே

நலமுற்ற பூவில்
நாளெனுரு பாவி
நாளுமுனை துதியாமலே
நானின்றேன் மதியாமலே வே

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆண்டிபண்டாரம் உனை
வேண்டிக்கொண்டேனே, பழனி ஆ

அநுபல்லவி.

தண்டாமரைமுகனே சாமி சரவணனே
அண்டாதி தேவர்போற்றும் ஆறுமுகமாய்விளங்கும் ஆ

பாததரிசனமே பார்க்கப் பழணிமலை
காதலா யோடிவந்தேன் கால்வலியை தீர்த்திடுவாய் ஆ

பஞ்சவர்க்கு தூதுசென்ற பரந்தாமன் றன்மருகா
தஞ்சமெனவே துதித்தேன் சங்கடந்தீர் நீமுருகா ஆ

கானக்குறத்தியின்மேல் காதல்கொண்டு இங்கிர்தமாய்
வேணத்தினை மாலவைத்தின்று வேங்கைமர மாய்வளர்ந்து ஆ

கழுகுமலையில்வாழும் கந்தப்பா ஷண்முகனே
தொழுதேனே பாலகனென் துன்பவினை போக்கிடுவாய் ஆ

கிரீன் லேபில் ரிகார்ட்.

மதுரை-மிஸ்-A-சுந்தரம் பாடியது

பிளேட் நே, 2779 { நாட்டுபருத்தியை / கர்நாடகந்தன்னிலே

தேசியகீதம்.

பல்லவி.

நாட்டுப் பருத்தியை கொட்டை நீக்கி நல்ல
நாகரீகமானதோர் பஞ்சுண்டாக்கி நா

அநுபல்லவி.

வீட்டிற்கொருவராய் மேற்கு நோக்கி நூற்க
மேற்கு சுழன்று நின் றாடுராட்டே—இனி
ஆடு ருட்டே மகிழ்ந் தாடுராட்டே சுய
ஆட்சியைக் கண்டோமென் றுடுராட்டே நா

சரணங்கள்.

காட்டுப் புலையராம் அன்னிய நாட்டார்—நம்
கைத்தொழில் யாவும் யறித்துப் பேர்ட்டார்-இதைக்
கேட்டு எவர்தாம் நகைக்க மாட்டார் உண்மை கிளற்றி
புணர்ந்து நின்றுடுருட்டே ஆடுருட்டே மகிழ்ந்தாடுருட்டே
சுழன்றுடுருட்டே-சுய ஆட்சியைகண்டோமென் றுடுராட்டே

திருவள்ளுவர் செய்த நெசவுவேலை—புத்தகம்
பாரதி கண்ணன் புரிந்த லீலை—இந்த
தெள்ளுந்தமிழ் நாட்டில் வெற்றிமாலை
சீர்பாதங்கண்டோமென் றுடுராட்டே-மகிழ்ந்
தாடுருட்டே புகழ்ந் தாடுருட்டே சுழன்றுடுராட்டே-சுய
ஆட்சியை கண்டோமென் றுடுராட்டே நா

தேசியகீதம்.

பல்லவி.

கர்நாடகம் தன்னிலே
கைவிளங்கும் மெய்விங்கும் கர்

அநுபல்லவி.

மெய்யான ஆமணக்கும்
முத்தா லெரிவிளக்கும்
எல்லாம் பொய் ஏமாற்ற விட்டதையா
ஜனங்களைத்தான்
இம் மட்டுமா இன்னு
முரைக் கட்டுமோ கர்

சரணங்கள்.

எண்ணெயில்லாமலே கரண்டிலெரியும்
எலக்ட்ரிக் என்றொரு விளக்குமாச்சுது
இப் போ து கர்

முன்னுளின் விளக்குகளும் மூழிப்பாட்ட மாகிடவே
என்னதான் செய்வோமென்று ஏங்கி மங்கி எரியுதின்று
லஸ்தர் குலோப்புகட்கும் மதிப்பில்லையே
நல்லபவர் லாம்புகட்கும் குதிப்பில்லையே கர்

எங்கு மொலி தரும் பாஸ்கரன் போல வி
ளங்கிடும் மின்சார சக்திக் கோர் வந்தனம்
இப் போ து கர்

பிளேட் நே, 2615 { ஆடும் சிதம்பரமோ
வா வா முரு கா

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆடும் சிதம்பரமோ ஐயன்கூத்
தாடும் சிதம்பரமோ

அநுபல்லவி.

ஆடும்சிதம்பர மன்பர் களிக்கவே
நாடும் சிதம்பரம் நமச்சி வாயப்பொருள் ஆ

சரணம்.

ஆருமறியாமல் அம்பல வாணனார்
சீரடியார் பார்க்கச் சேவடி தூக்கியே
பால கிருஷ்ணன் போற்றும்
பனிமதி சடையினார் ௮

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவா முருகா வேலவா
வள்ளி மண வாளா வா

அநுபல்லவி.

வெந்துயரால் நொந்துமிகச்
சிந்தை கலக்கம் கொண்டேனே வா

சரணங்கள்.

வீரர்கள் கண்டஞ்சிடும் சூரர்களை நாசம்செய்து
தேவர்களும் பூஊரரும் கூவிமலர் தூவப்பெற்றாய்
நாரதர் சொல் புனமே சேர வள்ளியைக் கண்டு
வேங்கை மரமாய்க் கிழவனாய் மங்கையை மோசம் செய்தாய் வா
எந்தன் சிந்தை குறைநைய
வந்து வுதவுவா யெனில்
உந்தன் பழணி சன்னிதி
வந்து தரிசிப்பே னுன்னை வா

பிளாக் லேபில் ரிகார்ட்.

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிரமாடிக் கம்பேனி
அயன் ஸ்திரீபார்ட்

மனமோகன R. M. ரங்கசாமிநாயுடு

பாடியது.

பிளேட் நெ, 3573. எப்படிதான் தாய்வயிற்றில்

அலங்காரி பாடல்.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிதான் தாய்வயிற்றி
லிருந்தீரோ பத்துமாதம்
இத்தனை பதட்டமாக எ

அநுபல்லவி.

இப்படிக்கெல்லாம் செய்தால்
இடிப்பேன் புடைப்பேன் துஷ்டா
எதற்கோ நீங்கள் வந்தது
ஈனமான மற்ற ப்ரஷ்டா எ

சரணம்.

மாங்காயைத் தொடலாமா
மட்டி மக்களா
மடையரே தின்னலாமா
மாபாவிகளே
தேங்காயைத் தொடலாமா
உங்கள் கையை
தீயால் தரிக்கலாமா
ஆங்காரமோ அடா
அடக்கமில்லாப் பேய்களே
போங்காலமோ உங்கட்கு
பொறுக்கவந்த நாய்களே எ

அல-வ-ம்:--சீ சீ! வேசிமக்களே! பிறர் வீட்டிலுள்ள பொருள்களை உரியவர்களின், உத்தரவின்றி எப்படி எடுக்கலாமடா தடிப்பயல்களே! இவ்வளவு பதட்டமா! எப்படியடா உங்கள் தாய்வயற்றில் பத்துமாதமா யிருந்தீர்கள் நாய்களே! பேய்களே! சீ சீ! வந்த வழியைப் பார்த்து ஓடிப்போங்களடா கழுதைகளே!

கிரீன் லேபில் ரிகார்ட்.

மதருஸ் மிஸ்டர்

A. S. ராசப்பா பாடியது.

ப்ளேட் நெ, 2810 { கந்தா காருண்யனே
நாத சங்கீதபோன்

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தா காருண்யனே கனசேவல்னே க

அநுபல்லவி.

செந்தூரார் புண்யனே கொடி காவலனே க

கஜல்.

ஆதியோடனாதியான ஜயனே முருகையனே

சரணம்.

பொன்னே பூம்பதமே உன்னை போற்றினேனே
என்மேலேன் கதமே பணிந்தேற்றினேனே க

கஜல்.

காக்ஷியோத கடாக்ஷி மாக்ஷிகொள்
கந்தனே! சிவ மைந்தனே!
காக்ஷியோது மீனாக்ஷியாள் தரு
கந்தனே! பிரபந்தனே!

ஷ சரணம் எடுப்பு.

தந்தாளாய் சரணம் இன்னம் தாமதமா
பண்கேளாய் தருணம் அசம்பா விதமா க

இராகம்-ராகமாலிகா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நாதசங்கீதப்பொன் மணிமண்டபம்
நயனத்திடையினில் நடனங்கண்டேன்
நாவைமடக்கியே மேல்வாசல்
நளினமதுவருந்த அருள்வாயே
ஞானவேலா ஞானவேலா
நவமணி பதித்தொளிர் ஞானவேலா நா

முத்தொடு பவளமும் பச்சையுமாய்
முச்சுடரொளிமணி முழக்கமெனும்
சுத்த அற்புததச விதநாதம்
தொனிக்கு தெனக்குள்சுதி லயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனென்னையினிப்பரி சோதியாதே நா

கமலமென்மலரிதழ் மனைவாழும்
கௌரிகுண்டலிதுயில் கலைந்திடவே
சமரசமோன சுகாதீத
தாரகப்பிரணவச் சுழிமுனையின்
சாமகீதா சாமகீதா
தவமகரிஷிமகிழ் சாமகீதா நா

பிளேட் நே, 3065 மாமணி மரகத (காபி)

இராகம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மாமணி மரகத சுபகர சொரூப
ஞானவரமருள் மீனு
சோமசுந்தரேஸ் வரமேவும்
சோபன கல்யாணி
துதி மதுராபுரி யானதூப நிதி ஞானி மா

அநுபல்லவி.

தாயிலும் பிள்ளைக்காதாரம்
தானுண்டோ சொல்வாயே
சாகித்ய சுந்தரன் சொல்
சங்கீத தொண்டர் நேயர் மா

பிளாக் லேபில் ரிகார்ட்.

ஸ்ரீமான் மிஸ்டர்.

R. நடராஜ ஆச்சாரி பாடியது.

அதிரூப அமராவதி.

பிளேட் நே, 2199 { மோகனு / இஷ்டரதிராணி

இராகம்-பித்தா-தாளம்-ஆதி.

பல்லவி.

மோகனு உன்னைக்
கட்டியணையாமல் போவனு அடி மோ
முத்தம்தருவாயே சித்தமகிழ் நீயே மோ

அநுபல்லவி.

கோகிலக்குயிலே கோமள மாமயிலே
நாகரீகக்காரி நோகச்செய்யாதே பாரி மோ

சரணம்.

என்மேல் தயைபுரிந்து
ஏதும் நினையாதிருந்து
இன்னம் பாராமுகம்
அன்னமே ஆகுமோ மோ

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

இஷ்டரதி ராணி இனிமேல்
விட்டு விடுவேனோ உனைநான் இ

கோதிலாத சங்கீத பாரதி
கோமளாங்கி நாதா எண்டி ஐயோ இ

குணமோ இனமோ தனமோ அடி
குணமிலங்குமிவள்தான் நடம்புரியும் சதுர்புயம்
தரிதரும் தணங்குதன இ

தனிப்பாடல்கள்.

தமிழ் நாடகாசிரியர் ஸ்ரீமான்

ச-சு-சங்கரலிங்ககவிராயர் பாடியது.

மதுரகான மிதுர்வசனி என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருத்தணிகைமேவும் கந்தசாமி
ஜனோபகார நாமி திருத் தணி

அநுபல்லவி.

பணியுமா லயன் பூமி
பதிதபாவநீ பரமதேவநீ
பதாம் புஜம்
தாராய் தரணி புகழ் திருத் தணி

சரணம்.

கார்த்திகா விரத ஞானபண்டிதா
கார்ப்பதுன்கடமை தானகண்டிதா
சீர்த்திதா சங்கரலிங்கம்
தியான ரட்சகா மோன வித்தகா
தேவா ஜீவா வாவா மஹானுபாவா திருத் தணி

பிளேட் நே, 1750 மாதவர் குலத்துதித்த.

நொண்டிச்சிந்து.

மாதவர் குலத்துதித்த நல்ல
மாட்டிடையர் ஆட்சிசெய்த கேட்டிடச் சொல்வேன்

ஆதவ மரபினர்கள் கூடி
அரசு புரியுமுயர் நகரந்தனில்
காவிரிப்பூம் பட்டணமாம் அதில்
கனத்த வணிகர் செல்வர் குலத்துதித்த
மேவிய மாச் சோட்டாஞ்செட்டியார் பெற்ற
மேவளர்ந்த மைந்தனென்பேர் கோவலன் என்பார்
மாதிவன் கர்ணகை யென்பார் சிறுவயதில்
மாங்கனியை கைகொடுத்து மாலையுமிட்டேன்
மாதவியென்னும் பெயர் கொண்ட தாசியை
வைப்பு வைத்துக்கொண்டிருந்தேன் சொத்துயிழந்தேன்
மேலுமவளுக்கு நான் கடன் ஆகி
விட்டதினுல் இவள் சிலம்பை விற்கவும் வந்தேன்
நானொரு இடத்திலிருந்தேன் மனந்
தத்தளித்து மெத்த மனம் துக்கப்படவே
இதுதான் சேதியம்மா வேறே
இப்புரத்தில் சுற்றிடமுமில்லை யில்லையம்மா மாத

பிளேட் நே, 3063 சிதம்பரம் போகாமல்
இராகம்-ஆனந்தபைரவி-செஞ்சுருட்டி.

சிதம்பரம் போகாமல் இருப்பேனே நான்
ஜென்மத்தை வீணுக கெடுப்பேனே சித
பக்தியும் மனமும் பொருந்தின தங்கே
சத்தியம் சொன்னேன் சடலமும் இங்கே
ஆசையும் நேசமும் ஆனந்த மங்கே
பேசலும் பிதற்றலும் பாசமும் இங்கே சித

M. N. முத்துக்குமாரசாமி பாவலர்

பாடியது.

நம்பிக்கை கொண்டெல்லோரும் என்ற மேட்டு.

பல்லவி.

கலியுகவரதக் காந்திமகானைக் கண்டால் கலிதீரும்
கண்டால் கலிதீரும் நாமம் விண்டால் வினை போகும்

அநுபல்லவி.

சலியா மனத்திடை தீரன்
சாத்வீக கோதண்டராமன் புவி
தனிலிவரொரு வர பிரசாதக் குருஜன நாயகத் தெய்வம் கலி

தொகையரா.

சுதந்தர மிழந்த இவ்விந்தியர் சுகம்பெற
துணிந்து பலதியாகம் செய்தார்
"சுயராஜ்யமே நமது பிறப்புரிமை" எனும் மொழியை
சொல்லியே வழி காட்டினார்

பாட்டு எடுப்பு.

பல உலகினர் தினம் தொழும் கலையுணர் வீரக்
கருணாகர மூர்த்தி—பாவலர்
கருணாகர மூர்த்தி
குருவாய் புகழ் கீர்த்தி கலி

மதுரை மிஸ். சுப்புலக்ஷ்மி

பாடியது.

பிளேட் நே, 2767 ஊத்தக்குழியிலே ராகமாலிகை.

ஊத்தக்குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்
வரவோட்டுக் காகாதென்று ஆடாய்பாம்பே
ஆடுபாம்பே ஆடுபாம்பே—சிவன்
சீர்பாதம் கண்டோமென் றாடாய் பாம்பே
இருவர் மண்சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையாய் இருப்பினும் அந்த சூளை
அரைக்காசுக் காகாதென்று ஆடாய்பாம்பே
ஆடுபாம்பே ஆடுபாம்பே—சிவன்
சீர்பாதம் கண்டோமென் றாடாய் பாம்பே
பரிகாசம் போலவே கடித்த பாம்பு
பலபேரறியவே மெத்த வீங்கி
பரிகாரமொரு மாது பார்த்தபோது
பையோடே கழன்றதென் றாடாய்பாம்பே
ஆடுபாம்பே ஆடுபாம்பே—சிவன்
சீர்பாதம் கண்டோமென் றாடாய் பாம்பே

முதற்பாகம் முற்றிற்று.